15வது வருடத்தில்

# விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059 416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

வீடு விற்க, வாங்க...
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
Direct: 416.315.9397
OFFICE: 416.321.6969
Sales Agents Welcome

நதி 15 | பாலம் 20 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | OCTOBER 15, 2005



03 குரங்குகள் வாங்கும் பென்சன்



11 சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி

**குறும்திரைப்பட பயிற்சிப் பட்டறை**
**ஒக்ரோபர் 29, 2005**

# பாகிஸ்தான் நிலைகுலைந்தது!

### 40 ஆயிரத்துக்கும் மேல் மக்கள் பலி

இந்திய பாகிஸ்தான் எல்லையில் நிகழ்ந்த பூகம்பத்தினால் பேரழிவு ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு செல்ல முடியாமல் பாதைகள் அழிந்துபோய் உள்ளன. இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் செல்வது நாட்கணக்கில் தாமதமாகியுள்ளது.

தாமதித்து கிடைக்கின்ற நிவாரண உதவிகளால் மக்கள் கடும் கோபம் உற்று வன்முறைகளில் ஈடுபடுவதுடன், பாதிப்படைந்த ஏனைய கிராமத்திற்கு செல்லும் உதவிப் பொருட்களையும் வன்முறையாக சூறையாடுகின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவி வழங்குமாறு ஐ.நாடுகள் சபை சர்வதேச நாடுகளிடம் கேட்டுள்ளது. பாகிஸ்தானில் இருபது இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் வீடுகளை இழந்துள்ளனர். பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள காஸ்மீரில் மட்டும் 50 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர். பலியாகியோரின் எண்ணிக்கை இன்னமும் அதிகரிக்கலாம் என்ற தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானால் பாதிக்கப்பட்ட மக்களை உடன் காப்பாற்ற முடியவில்லை. அமெரிக்கா உடனடியாக எட்டு ஹெலிகொப்டர்களை அனுப்பி வைத்தாலும் அது போதுமானதாக இல்லை. இந்திய விமான, ஹெலிகொப்டர் உதவிகளை பாக்கிஸ்தான் நிராகரித்துவிட்டது. இத்தனை காரணங்களாலும் உயிருக்காகப் போராடியவர்களை உடனடியாக மீட்க முடியாமல் போய்விட்டது.

பூகம்பம் ஏற்பட்ட காஸ்மீர் பகுதிகளில் குளிர்காலம் ஆரம்பித்துள்ளது. வீடுகளை இழந்த மக்கள் குளிரினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு கடுமையான தொற்று நோய்களும் இப்பகுதியில் ஏற்பட்டுள்ளது. இவை காரணமாக மேலும் பல ஆயிரக்காண உயிர்இழப்புகள் ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இதே சமயம் சில வாரங்களுக்குள் மீண்டும் ஒரு பூகம்பம் ஆசியாவில் ஏற்படும் அபாயம் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமாதானமா? இனவாதமா?




இலங்கையின் அடுத்த ஜனாதிபதி தேர்தல் பெரும் எதிர்பார்ப்போடு நடைபெறவுள்ளது. இந்த தேர்தலின் முடிவு தமிழ் மக்களுக்கு உரிமைகள் எதனையும் பெற்றுத் தரப்போவதில்லை. ராமன் ஆண்டாலும் சரி இராவணனன் ஆண்டாலும் சரி தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக தொடர்ந்து போராடிக் கொண்டே இருக்க வேண்டிய நிலைமையே தொடர்கின்றது.

இலங்கையின் இன்றைய பிரதமரும், ஜனாதிபதி வேட்பாளரும் ஆன மகிந்த ராஜபக்ச கட்சியின் முடிவுகளுக்கும், கொள்கைகளும் எதிராக இனவாத கட்சிகளான ஜே.வி.பி, மற்றும் ஜாதிக ஹல உறுமயவுடன் ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து சுதந்திரக்கட்சியின் தலைவியும், இன்றை ஜனாதிபதியுமான சந்திரிகா பகிரங்கமாகவே மகிந்த ராஜபக்சவுக்கு எதிரான கருத்துகளை வெளியிட்டு வருகின்றார். அத்தோடு அரசியல் எதிரியும் ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான ரணிலை பாராட்டியும் வருகின்றார். அதே சமயம் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சரும், சந்திரிகாவின் சகோதருமான அனுரா பண்டார நாயக்காவும் மகிந்தாவின் ஒப்பந்தத்திற்கு எதிராக கருத்து வெளியிட்டதுடன், தெளிவான நிலைப்பாட்டை மகிந்தா தெரிவிக்காத வரையில் தேர்தல் பிரச்சாரத்தில் தான் ஈடுபட மாட்டேன் என்றும் கூறியுள்ளார்.

'சுனாமி தொடர்பான பொதுக்கட்டமைப்பை இரத்துச் செய்யுமாறும், புலிகளுடன் பேசக் கூடாது என்றும் ஜே.வி.பி கூறுகின்றனர். இந்த கொள்கைகளுடன் ஒரு போதும் இணங்க முடியாது' என்று பத்திரிகையாளர்களிடம் அனுரா கூறியுள்ளார்.

சுதந்திரக் கட்சிக்குள் உள்ள இந்த பகிரங்கமான நிலைமை மகிந்தவுக்கு எதிரான சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது. காலம் காலமாக கட்சிகளுக்காக வாக்களிக்காமல் கடைசி நிமிடத்தில் மனச்சாட்சிப் படி வாக்களிக்கின்ற கணிசமான சிங்கள மக்களை, மகிந்தவுக்கு எதிராகவே வாக்களிக்கவே இது தூண்டியுள்ளது.

இலங்கையின் சிறுபான்மை இனத்தவர்களும் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹல உறுமய கட்சிகளை அச்சத்துடனேயே பார்க்கின்றனர். அவர்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ள மகிந்த ராஜபக்ச சிறுபான்மை மக்களின் நம்பத்தகுந்தவராக அவர்களுக்குத் தெரியவேயில்லை.

தன்னுடன் இருபதுக்கும் மேற்பட்ட கட்சிகள் கூட்டமைத்துள்ளன என்று மகிந்த தம்பட்டம் அடித்துக் கொண்டாலும், பல இலட்சங்கள் வாக்குகளை தம் கையில் வைத்துள்ள சக்தி மிக்க இ.தொ.கா, மலைய மக்கள் முன்னணி, முஸ்லீம் காங்கிரஸ் என்பன ரணிலுடன் கைகோர்த்துள்ளன.

'தமிழ் மக்கள் தமது விருப்பப்படி வாக்களிக்கலாம்' என்று கூறி புலிகள் நழுவிக் கொண்டாலும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளும் இனவாத கட்சிகளான ஜேவிபி, மற்றும் ஜாதிக ஹல உறுமயவுக்கு எதிராகவே விழும் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை. யாழ்ப்பாணத்தில் மிகுந்த பாதுகாப்புக்கு மத்தியில் ஒட்டப்பட்ட மகிந்தவுக்கு ஆதரவான

தொடர்ச்சி 02ம் பக்கம்


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"

HomeLife GTA Realty Inc.
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416-817-8479
Bus: 416-321-6969
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER


Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
• Auto • Home • R.R.S.P • Life
• Disability • Mutual Fund • Group Insurance • Child Education
• Travel & Business
416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD, TORONTO, ON M1B 5P9, CANADA TEL: 416-282-8059, FAX: 416-282-4978, e-mail: vlambaram@sympatico.ca, Web: www.Vlambaram.com

# கடன் அறிக்கை அல்லது கடன் சரித்திரம்

உங்களின் கடந்த கால கடன் சரித்திரத்தை வைத்தே எதிர்காலத்தில் அல்லது நிகழ்காலத்தில் கடன் கிடைக்கின்றது என்று பார்த்தோம். அதன் விரிவை இப்போது பார்ப்போம். கடன் அறிக்கை அல்லது கடன் சரித்திரம் நீங்கள் எவ்வாறு ஒழுங்காக அல்லது ஒழுங்கீனமாக உங்கள் கடன்களை கடந்த காலத்தில் கட்டி வந்திருக்கிறீர்கள் என்று தெரிவிக்கின்றது. நீங்கள் கனடாவில் முதன்முதலாக கிரிடிட் கார்ட் அல்லது கடனுக்கு விண்ணப்பித்த போது உங்கள் கடன் சரித்திரக்கோப்பு (File) திறக்கப்பட்டது. அதிலிருந்து உங்களுக்குக் கடன்கொடுத்த நிதி நிறுவனங்களும், கிரிடிட் கார்ட் வழங்கிய நிறுவனங்களும், நீங்கள் எவ்வாறு கடனைக் கட்டி வந்திருக்கிறீர்கள், வருகிறீர்கள் என்ற விவரத்தை கடன் சரித்திரத்தைப் பராமரிக்கும் இரு நிறுவனங்களுக்குத் தொடர்ந்து தெரிவித்து வருகின்றன. தனிநபர் கடன் சரித்திரத்தை கனடாவில் பராமரிக்கும் இரு முக்கிய நிறுவனங்கள் (1) எக்யுபாக்ஸ், (2) டிரான்ஸ் யூனியன்.

இந்தக் கடன் சரிதம் தெரிவிக்கும் சில விவரங்கள் - தவணைத் தேதியிலோ அல்லது அதற்கு முன்னரோ தொடர்ந்து கடன்களைக் கட்டி வந்திருக்கிறீர்களா? தவணைப் பணத்தைக் கட்டத் தவறியிருக்கிறீர்களா? உங்களுக்குக் கொடுக்கப்பட்ட அளவுக்கு மேல் உங்கள் கடன் தொகை இருந்திருக்கிறதா? அதாவது வட்டி போன்றவற்றைக் கட்டத் தவறியதன் மூலம் உங்கள் கடன் அங்கீகரிக்கப்பட்ட அளவுக்கு மேல் அதிகரித்திருக்கின்றதா?

ஆக ஏற்கனவே உங்களுக்குக் கடன் கொடுத்த நிதிநிறுவனங்கள் உங்களைப் பற்றிய நிதிவிவரங்களையும், அவற்றை நீங்கள் கையாண்ட முறையையும் கடன் சரிதத்தைப் பராமரிக்கும் நிறுவனங்களுக்குத் தெரிவிக் கின்றன. இனி உங்களுக்குக் கடன் கொடுக்க நினைக்கும் நிதிநிறுவனம் அத்தகைய கடன் சரிதத்தைப் பெற்று உங்களுக்குக் கடன் கொடுப்பதா? வேண்டுமா? என்று "ரிஸ்க்" கை அளவிட்டுத் தீர்மானிக்கின்றது. உங்கள் கடன் சரிதத்தில் என்னென்ன விவரங்கள் இருக்கக்கூடும்? பதில் இதோ

• உங்களை அடையாளம் காட்டும் விவரங்கள். அதாவது உங்கள் பெயர், முகவரி, பிறந்ததேதி, சமூகப் பாதுகாப்பு எண் (Social Insurance Number) முதலியன.

• நுகர்வோர் அறிக்கை (Consumer Statement) உங்கள் கடன் சரிதத்தில் இருக்கும்

## வாழ்வில் வெற்றி பெற

விவரங்களைப் பற்றி நீங்கள் ஏதேனும் தெரிவிக்க விரும்பினால், சிறு குறிப்பின் கீழ் இப்பகுதியிலி தெரிவிக்கலாம்.

• கடன் விவரம் - நீங்கள் வாங்கிய கடன்களும், கிரிடிட்கார்ட் கடன்களும் இப்பகுதியில் அடங்கும்.

• வங்கித் தகவல் - நீங்கள் வங்கியில் கணக்கு வைத்திருக்கும் விவரமும் காசோலைகளை பணம் இல்லாத போது கொடுத்திருந்து, திருப்பியனுப்பப்பட்டிருந்தால் அத்தகைய விவரமும் இப்பகுதியில் அடங்கும்.

• பொதுத்தகவல் - பெறுமதிக்கடன் விவரம், கோர்ட் நடவடிக்கைகள், திவால் (Bankruptcy) ஆகியிருந்தால் அந்த விவரம் போன்றவை இப் பகுதியின் கீழ் வரும்.

• மூன்றாவது நபர் பண வசூல் நடவடிக்கைகள் (Third party collection)

கலெக்ஷன் ஏஜன்ஸி மூலம் யாரேனும் உங்களுக்குத் கொடுத்த கடனை வசூல் செய்ய முயன்றிருந்தால் அந்த விவரங்கள் இப்பகுதியில் வரும்.

• விசாரணைகள் - கடந்த மூன்றாண்டுகளில் உங்கள் கடன் சரிதத்தை விசாரித்த, பார்த்த நபர்கள், நிறுவனங்களின் விவரங்கள் இப்பகுதியின் கீழ்வரும்.

வீட்டுக்கடன் பற்றிய விவரங்களைப் பல கடன் கொடுத்த நிறுவனங்கள், இந்தக் கடன் சரித நிறுவனங்களுக்குத் தெரிவிப்பதில்லை. எனவே பல சமயங்களில் வீட்டுக்கடன் பற்றிய விவரங்கள் கடன் சரிதத்தில் இடம் பெறுவதில்லை. கடன் சரிதத்தை நிருவகிக்கும் நிறுவனங்களுக்கும் பல சட்ட திட்டங்கள் உள்ளன. மத்திய, மாநில அரசுகளின் சட்டங்களுக்கு ஏற்பவே இந்நிறுவனங்கள் தனிநபர் விவரங்களைச் சேகரிக்கின்றன. கடன் கொடுக்கும் பல நிறுவனங்கள் இந்தக் கடன் சரித நிறுவனங்களில் உறுப்பினர்களாக இருக்கும். உதாரணமாக வங்கிகள், கிரிடிட் யூனியன்கள், லீஸிஸ் கம்பெனிகள், கடன் கொடுக்கும் வணிக நிறுவனங்கள் என்று பலவற்றைச் சொல்லலாம். இத்தகைய உறுப்பினர்கள் கடன் சரித நிறுவனங்களுக்குத் தொடர்ந்து தரும் விவரங்களினால், உங்களைப் பற்றிய விவரங்கள் சமீபத்திய காலம்வரை உள் அடங்கியதாக இருக்கும். கோர்ட் மற்றும் கலெக்ஷன் ஏஜன்ஸியில் காணப்படும் உங்களைப் பற்றிய தகவல்களும், இக்கடன் சரிதத்தில் இடம் பெற்றிருக்கும்.



உங்கள் அனுமதி இன்றி யாரும் உங்கள் கடன் சரிதத்தைப் பார்க்க முடியாது என்பது மத்திய, மாநில விதிகளில் ஒன்றாகும். நீங்கள் கடனுக்கு விண்ணப்பிக்கும் போது இத்தகைய அனுமதியை எழுத்து மூலம் நீங்கள் வழங்குகிறீர்கள். படித்துப் பார்த்துக் கையெழுத்துப் போட்டால் இந்த உண்மை தெரியவரும். மேலும் அரசாங்க விதிகளின்படி, உங்கள் கடன் சரிதத்தைக் கோரும் நிறுவனம், உங்களுடன் நியாயமான காரணங்களுக்காக வர்த்தகத் தொடர்பு உள்ள நிறுவனமாகவும் இருக்க வேண்டும்.

கடன் கொடுத்தல், கடனை வசூலித்தல், வாடகைக்கு விடுதல், வேலைக்குச் சேர்த்தல், காப்புறுதி கொடுத்தல் போன்றவை நியாயமான காரணங்களில் அடங்கும். எனவே அபார்ட்மெண்ட் வாடகைக்கு கேட்டுப்போகும் போதே, காப்புறுதி கேட்டு விண்ணப்பிக்கும் போதோ, வேலைக்கு மனுப் போடும் போதோ அத்தகைய நிறுவனங்களும், உங்கள் சரிதத்தைப் பார்க்கக் கூடும். பார்த்துத் தகுந்த முடிவை எடுக்கக் கூடும் என்பதையு நினைவில் கொள்ள வேண்டும். ப சமயங்களில் கடன் சரிதத்தில் தவறுகள் இருக் வாய்ப்பு உள்ளது. உங்கள் தனிந விவரங்களை உங்களுக்குத் தெரியாம திருட்டுத் தனமாக மற்றவர் பயன்படுத்தவு வாய்ப்பு உள்ளது. இத்தகைய வாய்ப்புக்க னால் உங்கள் சரிதம் பழுதடையவும் நேரலா எனவே 12 இலிருந்து 18 மாதங்களுக் ஒருமுறை உங்கள் சரிதத்தைப் பெற் விவரங்கள் சரியாக உள்ளனவா என்று பார்த்து கொள்ள வேண்டும். குறிப்பாக வீட்டுக்கட போன்ற முக்கியமான காரியங்களுக் விண்ணப்பிக்கு முன் உங்கள் கடன் சரித் ஒருமுறை நீங்களே பார்த்துக் கொள்ள பின்னால் வரும் ஏமாற்றத்தைத் தவிர்க்கும்.

### பெரி. முத்துராமன்

தபால்மூலம் கடன் சரிதத்தைப் பெறச் செல ஒன்றும் இல்லை. கடன் சரித நிறுவ இணையதளத்தில் அதற்கான விண்ணப்பத்தை பெற்று, உங்களைப் பற்றிய விவரங்களை பூர்த்தி செய்து தபாலில் அனுப்பினா இரண்டிலிருந்து மூன்று வாரங்களுக்கு தபாலில் உங்கள் கடன் சரிதம் இலவசமாக வீ வந்து சேரும். உடனடியாகக் கடன் சரித வேண்டும் என்றால், கிரிடிட்கார்ட் மூல இணையதளத்தில் பணம் செலுத்தினால் இணையதளத்தில் உங்கள் கடன் சரித மொத்தத்தையும் ஒரே எண் மூலம் குறிப்பிடுவ தான் கடன் சரித மதிப்பெண் அல்லது ஸ்கோ எனப்படுகின்றது. பொதுவில் 650 க்கு மே இருந்தால் குறைந்த வட்டியில் கடன் கிடைக் வாய்ப்பு உள்ளது. இந்த மதிப்பெ நிறுவனத்துக்கு நிறுவனம் மாறுபடும். சி நிறுவனங்கள் 690 அல்லது 700 க்குமேல் கிரிடி ஸ்கோர் இருந்தால் தான் குறைந்த வட்டியில் கடன் தரத் தயாராக இருக்கும்.

ஆக நம்மைப் பற்றிய விவரங்கள் எல்லாம் கட தர நினைப்பவர்களுக்குத் தெரிந்து விடுகின்றது அதைப் பொறுத்தே எதிர்காலத்தில் வாய்ப்புகளும், வாய்ப்பின்மையும் உருவாகின்றது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். பழுதான கடன், வாழ்வைப் பழுதாக்கும் இன்னும் மேல் அதிக விவரங்களை அடுத்த இதழில் பார்ப்போம்.



# சமாதானமா? இனவாதமா?

முதலாம் பக்கத் தொடர்ச்சி

சுவரொட்டிகள் கிழித்தெறியப்பட்டு வருகின்றன என்பது இதற்கு கட்டியம் கூறுகின்றன. புலிகளின் மறைமுகமான விருப்பமும் இந்த இனவாத கட்சிகள் தோற்கவேண்டும் என்பதாகவே இருக்க முடியும்.

மகிந்த ராஜபக்ச 1946 ல் பிறந்தவர். முன்னைநாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனாவின் மருமகனாகிய ரணில் விக்கிரம சிங்க 1949ல் பிறந்தவர். ரணிலை விட மூன்று வயது அதிகமாக இருந்த போதும் அரசியல் அனுபவத்தில் மகிந்த, ரணிலிடமே கற்றுக் கொள்ள வேண்டியவராகின்றார். இதனை இந்தப் பொதுத் தேர்தல் நிருபித்துக் காட்டும்.

கடந்த காலத்தில் ஜனாதிபதி வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள் இந்தத் தேர்தலில் யார் வெற்றிபெறுவார் என்பதை முன்கூட்டியே கூறிவிடும்.

1994ம் ஆண்டு ஐ.தே.கட்சி மீது மக்கள் பெறும் வெறுப்படைந்திருந்த நிலையில், பொதுஜன ஐக்கிய முன்னணி 62.28 சத வீத வாக்குகளையும் (தமிழர், முஸ்லீம்கள், மலையகத்தமிழர் ஆதரவுடன்), ஐ.தே.க 35.91 சத வீத வாக்குகளையும் பெற்றுக் கொண்டன.

பின்னர் 1999ல் பொது ஜன ஐக்கிய முன்னணி செல்வாக்கு இழந்து வரும் சமயம் மலைய மக்கள், முஸ்லீம் மக்களின் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து 51.1 வீத வாக்குகளுடன் வெற்றி பெற்றது. இச்சமயம் வடக்கு கிழக்கு தமிழர்கள் சந்திரிகாவுக்கு எதிராகவே வாக்களித்திருந்தனர். ஐ.தே.க. 42.7 வீத வாக்குகளைப் பெற்றது. ஜே.வி.பி 4.1 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தது.

2005ல் நடைபெறவுள்ள இந்தத் தேர்தலில் கடந்த இரண்டு தேர்தலிலும் சுதந்திரக் கட்சியுடன் இணைந்திருந்த முக்கிய கட்சிகளான இதொகா, மலைய மக்கள் முன்னணி, முஸ்லீம் காங்கிரஸ் என்பன இல்லை. அத்தோடு வடக்கு கிழக்குத் தமிழர்களின் வாக்குகளும் சுதந்திரக்கட்சி வேட்பாளரான மகிந்தவுக்கு இல்லை என்று ஆகிப் போய்விட்டது.

இது மட்டுமல்ல கடந்த காலத்தில் நடைபெற்ற தேர்தல்களில் எல்லாம் தமிழர்களின் பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு என்று முழக்கம் இடப்பட்டது. இந்தத் தேர்தலில் அதற்கெல்லாம் மாறுபாடாக, 'புலிகளுடன் பேசக் கூடாது', 'பொதுக்கட்டமைப்புக் கூடாது' என்ற கோசத்துடன் மகிந்த வேட்பாளராக நிற்கின்றார். அதனை அவருடைய கட்சி தலைவியே கண்டிக்கின்றார். இந்நிலையில் போர் வந்து விடுமோ என்ற அச்சம் சாதாரண சிங்கள குடிமகனுக்கும் வந்துள்ளது. இந்நிலையில் சமாதானத்தை விரும்பும் இலங்கையின் எந்த ஒரு குடிமகனும் மகிந்த ராசபக்சவுக்கு வாக்களிக்க முன்வரவே மாட்டார்.

இதனையெல்லாம் மீறி இனவாத கட்சிகள் வெற்றிபெற இலங்கையில் சாத்தியமே இல்லை. இலங்கை மக்கள் இலங்கை அரசியல் வாதி-களை விட மேன்மையானவர்கள் என்பதை மறுபடியும் இந்தப் பொதுத் தேர்தல் நிரூபித்தே காட்டும்.

விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

HOME INSPECTION
• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...
ந. தயாபரன்
Certified Inspection Specialist
Expert Building Inspections LTD.
• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report
24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# குரங்குகள் வாங்கும் பென்சன்

## இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமுடன் ஒரு சந்திப்பு


அந்த அலுவலகம் பிரம்மாண்டமானதாக, குடைந்து வைத்ததுபோல குறைவான வெளிச்சத்தில் இருந்தது. இடுப்பளவு உயரத்தில் இருந்து சீலிங் வரைக்கும் நீண்ட பிரெஞ்சு யன்னல்கள். பெரும்பாலான யன்னல்கள் வேலைப்பாடுகள் செய்த வெல்வெட் திரைச சீலைகளால் மறைக்கப்பட்டு டில்லியின் சூரியனும், வெக்கையும் உள்ளே வராமல் தடுத்தன. புறாக்கள் யன்னல் விளிம்புகளில் உட்கார்ந்து சத்தமிட்டன. அண்மையில் இருந்த மரங்களிலும், கட்டிடங்களிலும் குரங்குகள் நிறைய சஞ்சரித்தன. இயற்கையான வனப்பிரதேசச் சூழல் யன்னல் களை ஆங்காங்கே கறைபட வைத்திருந்தது. எந்த மனிதனுக்கு இந்த யன்னல்களை கழுவும் பணி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் யோசித்தேன். அதுவரை ஒரு பெண் பணியாளை-ரக்கூட நான் காணவில்லை.

அந்த அறையில் எதை எடுத்தாலும் அது பிரம்மாண்டமானதாகவே இருந்தது. பிரம்மாண்டமான சோபாக்கள், தடிப்பான கம்பள விரிப்புகள், ராட்சத தொங்கு விளக்குகள். அவருடைய மெய்க்காவலர்கள்கூட திட காத்திரமாகவும், பாரமாகவும் இருந்தார்கள். பென்னம்பெரிய கதவுகள் வழியாக வந்துபோகும் மிலிட்டரி உடையணிந்த உதவியாளர்கள்கூட கனமான கிருதிகளுடன் காணப்பட்டார்கள். எல்லாமே பாரியதாக இருந்தது, ஒரு மேசையின் முன் உட்கார்ந்து கம்புயூட்டர் திரையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அந்த மனிதரைத் தவிர. அவருடைய சிறிய உடலில் இருந்து சன்னமாகத்தான் குரல் எழும்பியது. அந்த அறையின் பரப்புக்குள் அவர் குரலை கேட்க வேண்டுமென்றால் சுற்றிவர கடுமையான மௌனம் தேவை. ஆனால் அந்தப் புறாக்கள் அவர் பேசுவதை மூழ்கடித்தன. எல் எழுத்துப்போல உயர்ந்த மரத்தில் வடிவமைக்கப்பட்ட அவருடைய தொன்மையான மேசை, ஒரு தூரத்து மூலையில் தள்ளப்பட்டு, இந்த ஆடம்பரங்களுக்கு மன்னிப்பு கேட்பதுபோல காட்சியளித்தது.

அப்துல் கலாம் ஆட்சி செலுத்துவது போலவே இல்லை. இந்தப் பெரிய படாடோபங்களில் அவர் சங்கடப்படுவது போலவே தோற்றமளித்தார். ஒரு கல்விக் கூடத்திலோ, ஒரு பல்கலைக் கழகத்திலோ அவர் இன்னும் கூடுதலான சௌகரியத்துடன் தன்னை உணர்ந்திருப்பார் என்று எனக்குப் பட்டது. என்னையும் ஒரு மாணவர் போலவே அவர் வரவேற்றார்.

நான் பிபிசி குழுவுடன் கடந்த ஒரு மாத காலமாக விவரணப் படம் ஒன்று எடுப்பதற்காக இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் அலைந்திருந்தேன். உலக அழகி ஐஸ்வர்யராயின் பேட்டி அடுத்த நாளுக்கு தள்ளி வைக்கப்பட்டிருந்ததால் மூன்று மாதம் முன்பாகவே ஒழுங்கு செய்திருந்த ஜனாதிபதியின் பேட்டியிலும் கடைசி நிமிடங்களில் சிறு மாறுதல் செய்யவேண்டி நேர்ந்தது. ஒரு நாட்டின் ஜனாதிபதியிலும் பார்க்க ஒரு நடிகை பிஸியாக இருந்ததை கண்டு பிபிசி உம் அதிசயித்தது. நாளைய பேட்டியே கடைசி. அத்துடன் வந்த காரியம் முடிந்து நான் மறுபடியும் வாஷிங்டனுக்கு பயணமாகிவிடுவேன்.

பிபிசி குழுவில் நாங்கள் எட்டுப்பேர் இருந்தோம். எல்லாமே வெள்ளைக்கார முகங்கள், என்னுடையதை தவிர்த்து. பல பாதுகாப்பு அரண்களை தாண்டி, பதினைந்து நிமிடங்கள் முன்பாகவே வந்துவிட்ட எங்களை ஒரு வரவேற்பு அறையில் உட்காரவைத்திருந்தார்கள். அதுவே ஒரு ஜனாதிபதிக்கு தகுதியான கம்பீரத்தோடு இருந்தது. எங்கள் குழுவின் தலைவர் விவரணப் படக் கலையில் புகழ் பெற்ற பட்டி ஸ்மித் என்பவர். ஜனாதிபதியை பார்க்க உள்ளே போகவேண்டிய நேரம் வந்ததும் இரண்டு பாதுகாவலர்களும், ஓர் உயர் அதிகாரியும் எங்களை அழைத்துச் சென்றார்கள். நான் மட்டுமே ஜனாதிபதியிடம் கைகுலுக்கினேன். மற்றவர்கள் காமிராவுக்கு பின்னே நின்று கொண்டார்கள். எங்களை அழைத்துவந்த அதிகாரியின் முகத்தில் ஆச்சரியத்திலும் பார்க்க ஏமாற்றமே மிஞ்சியிருந்தது. பாதுகாவலர் படக்கென்று திரும்பி தன் நேரம் வீணாகிவிட்டது என்பதை அப்பட்டமாகக் காட்டியபடி மறைந்துபோனார்.



இலங்கைத் தமிழரான முனைவர் சஞ்சயன் அமெரிக்காவில் உள்ளார். ஆங்கிலத்தில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இருபத்தி ஐந்தாவது காலம் இதழுக்காக சஞ்சயன் எழுதிய கட்டுரையை நன்றியுடன் நாம் பிரசுரிக்கின்றோம்.

ஜனாதிபதி என்னை சஞ்சயன் என்று உரிமையுடன் அழைத்தார் நான் பதிலுக்கு "மிஸ்டர் பிரெசிடென்ட்" என்றேன். எங்கள் சம்பாசணை தொழில் நுட்பம், இந்தியாவின் எதிர்காலம், சாதாரண மக்களின் அன்றாட சந்தோசம் இவற்றையெல்லாம் தொட்டது. இந்தியாவின் ஏவுகணை திட்டத்தின் சிருட்டிகர்த்தாவான ஒரு ஜனாதிபதியின் சிந்தனைகள் கவித்துவமாகவே இருந்தது என்னை வியப்பிலாழ்த்தியது. "இங்கே பாருங்கள் சஞ்சயன், நான் நூறு கோடி மக்களை சிரிக்கவைக்க விரும்புகிறேன். உங்களுக்கு புரிகிறதா? நூறுகோடி மக்கள் சிரிக்கவேண்டும். இது முடியும்." அவர் அதை சொன்னவிதம் அறிவை மீறிய ஒரு தேவவாக்கு போல என் காதுகளில் விழுந்தது. என் தலை என்னையறிமால் அசைந்தது. அவர் தன் கனவை சொல்ல ஆரம்பித்தார். இந்தியாவை தொடுக்கவேண்டும். முக்கோண வடிவமான இந்தியாவை குறுக்கறுத்து ஆயிரம் புதுச் சாலைகள் ஓடவேண்டும் இணையம் மூலமும், சாட்டிலைட் மூலமும் இந்தியா முழுவதையும் இணைக்கவேண்டும். ஒவ்வொரு நூறு கிராமத்துக்கும் ஓர் இணைய சேர்வர். அதிலிருந்து ஒவ்வொரு கிராமத்துக்கும் மின்னஞ்சல், இணைய தள வசதிகள். ஒரு புதிய EDUSAT என்ற செயற்கைகோளை விண்
வெளியில் நிறுவுவதற்கான ரொக்கட் ஒன்று விரைவிலேயே ஏவப்படும். உலகத்திலேயே கல்விக்காக முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சாட்டிலைட் இதுவாகவே இருக்கும். இதிலிருந்து லட்சக்கணக்கான இந்தியக் கிராமங்களுக்கு கல்வி அறிவுப் போதனைகள் ஒலிபரப்பாகும். போக்குவரத்து நெருக்கடிகளில் அடிக்கடி மாட்டி விழித்துக்கொண்டு இந்தியாவின் புதிய நெடுஞ்சாலை திட்டங்களை நாங்கள் ஏற்கனவே பார்த்திருந்தோம். அப்துல் கலாம் "ignited minds" என்றார். இளம் மனங்களில் ஒரு தீ பற்றவேண்டும். வெளியே வரத் துடிக்கும் இந்திய இளைஞர்களின் உச்சமான திறமைகளை விடுவிக்கவேண்டும். இந்த அரிய மனிதர் சந்தேகமில்லாமல் தன் பரிவான உள்ளத்தில் கனவுகள் காணும் ஒரு நம்பிக்கைக்காரர்.

தேநீரும் பிஸ்கட்டும் பரிமாறினார்கள். தேநீரை சிறிய பீங்கான் கிண்ணங்களில் பருகியபடி ஜனாதிபதி தன் மாளிகையைப் பற்றி சொன்னார். ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் காலத்து கட்டிடக் கலைஞர்களால் நிர்மாணிக்கப்பட்ட அந்த மாளிகையின் முதல் வைஸ்ரோய் ஏர்வின் கடைசி வைஸ்ரோய் மவுண்பேட்டன். என்றென்றைக்கும் அடக்கியாளலாம் என்ற எண்ணத்தில் பிரிட்டிஷார் எழுப்பிய மாளிகையில் அவர்கள் 17 வருடங்கள் மட்டுமே ஆட்சி செலுத்தினர். ஜனாதிபதி பேசிக்கொண்டிருந்த போது எனக்கு இன்னொன்று புலப்பட்டது. இந்த கண்ணைப் பறிக்கும் சோடனைகளும், அலங்கார தூண்களும், மாளிகையும் அப்துல் கலாமின் மாபெரும் கனவுகளை தாங்குவதற்கு போதாத ஒரு சிறு குடிசையாகவே எனக்கு அப்போது தோன்றியது.

நான் விடை பெறுமுன் கேட்டேன். "மிகுந்த அழகுணர்வோடு பராமரிக்கப்படும் உங்கள் தோட்டத்துக்கு போவீர்களா? குரங்குகள் தொல்லைப் படுத்துவதில்லையா?"

"ஓ, குரங்குகள், அவை பெரிதாக என்னை தொந்திரவு செய்வதில்லை." இப்படி சொல்லியவாறே தன் மேசையில் பதித்த சிவப்பு பொத்தானை ஜனாதிபதி அழுத்தினார். அந்தப் பொத்தானை அவருடைய மேசையில் ஒருவித ஒளிவு மறைவுமின்றி ஒட்டிவைத்திருந்தார்கள். அதிலே இருந்து தாறுமாறாக சென்ற வயர்கள் மேசையின் ஓரத்தில் ஸ்டேப்பிள் செய்யப்பட்டிருந்தன. ஒரு விண்வெளி விஞ்ஞானி யும், மாபெரும் நாட்டின் ஜனாதிபதியுமான அவருடைய மேசையிலே ஓடும் வயர்களை மறைத்து வைப்பது அவ்வளவு கடினமான காரி யமா என்று என்னை யோசிக்க வைத்தது.

"இந்தக் குரங்குகள் எங்களை தொந்திரவு செய்யாமல் பார்த்துக்கொள்ள சில உபாயங்கள் உண்டு" என்றார். அப்பொழுது ஜனாதிபதி எழுதிய இரண்டு புத்தகங்களை அவருடைய உதவியாளர் கொண்டு வந்து கொடுத்தார். ஆங்கிலப் புத்தகத்தில் கையொப்பமிட்டு என்னிடம் தந்தார். மற்றது தமிழ் புத்தகம். அதில் தமிழில் கையெழுத்து வைத்து இதை எழுத்தாளரான உங்கள் அப்பாவிடம் கொடுங்கள் என்றார்.

நான் விட்ட இடத்தை பிடித்துக் கொண்டு என்ன உபாயங்கள் என்றேன்.

"காவல்கார குரங்குகள். எங்களுக்கு ஓயாது தொல்லைதரும் சிறிய குரங்குகளுக்கு பெயர் லங்கர். பெரிய குரங்குகளின் பெயர் மக்காக்கி. பயிற்சி கொடுத்த மக்காக்கி குரங்குகளை சங்கிலியில் கட்டி காவல்காரர்கள் சுற்றிலும் உலாத்துவார்கள். இவற்றைக் கண்டதும் சிறிய குரங்குகள் ஓடிவிடும், கிட்ட வராது." என் முகத்தில் தோன்றிய ஆச்சரியத்தை என்னால் மறைக்கமுடியவில்லை. "நாங்கள் தோட்டத்துக்கு போகலாமா?" என்றார்.

### முனைவர் எம். சஞ்சயன்



"காவல் காக்கும் பெரிய குரங்கு களுக்கு சம்பளம் உண்டா?" என்றேன், பாதி நகையுடன்.

"நிச்சயமாக. ராஷ்டிரபதி பவன் ஊழியர்களின் பட்டியலில் அவற்றின் பெயர்களும் உண்டே". உலகத்தின் மிகப்பெரிய சனநாயகத்தின் அதிபதி என்னுடைய முழங்கையை பிடித்து தன் அற்புதமான தோட்டத்திற்கு அழைத்து சென்றார். கருணையே உருவான அந்த நல்ல மனிதருக்கு என்னுடைய மனக்கிலேசம் எப்படியோ தெரிந்துவிட்டது. "அவை ஓய்வு பெற்றபிறகு அவைக்கு பென்சனும் இருக்கிறது" என்றார்.

- (தமிழில் : பாலா)


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road, Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL

# "வீழ்வது நானாயிருந்தாலும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்"

## விஜயகாந்தின் புதிய கட்சி-2



தன் கட்சிச் செலவுகளுக்கு நன்கொடை வசூலிக்கப்போவதில்லை என்று விஜயகாந்த் பிரகடனம் செய்துள்ளார். இது அவரது தீர்மானம் என்றால், தமிழ் நாட்டில் தனித்து நிற்கும் அரசியல் வாதி அவர். தன் மாநாட்டுச் செலவே, தன் வீட்டை விற்ற காசிலிருந்து பெறப்பட்டது என்றார். ஒவ்வொரு மாவட்டமாக, மாநாடு நடத்தும், இந்த விழா, அந்த விழா என்று தொடர்ந்து அடிக்கடி திமுகவின் கூட்டங்களின் நோக்கம், கடைசியாக பிரசாரம். முக்கியமாக, மாநாட்டுக்கும் விழாக்களுக்கும் என்று முதலில் நன்கொடை ஒவ்வொரு வியாபாரிக்கும், செல்வந்தருக்கும் எவ்வளவு என்று கழகத்தினரே நிர்ணயித்து பலவந்த வசூல் நடக்கும். விழாச் செலவு போக மிஞ்சியது வசூலித்தவர்களின் பைக்குள்ளும், தலைமைக்கழகத்தின் பெட்டிக்குள்ளும் போகும். பண வசூலுக்காக மாநாடா, மாநாட்டுக்காக வசூலா என்பது அவரவர் யூகத்திற்கு விடப்படவேண்டிய விசயம்.

விஜயகாந்த் தமிழ் நாடு திரைப்பட நடிகர் சங்கத்தின் வெகு நாளைய தலைவர். அவருக்கு உதவியாக செயலாற்றுபவர்கள் என சரத் குமார், நெப்போலியன் போன்ற திமுக சார்பாளர்களும் உண்டு. எஸ்.எஸ் சந்திரன் போன்ற அதிமுக சார்பாளர்களும் உண்டு. இவர்கள் எல்லோரிடமும் விஜயகாந்த் நல்லுறவு வைத்திருப்பவர். உறவுகளைக் காப்பதில் திறமைசாலி. யாருடனும் அவர் மோதிக் கொண்டது கிடையாது. யாரும் அவரிடம் மோதியதும் கிடையாது. தன் கட்சியைத் தொடங்க நடத்தப்பட்ட மாநாட்டிற்கு அவர் கருணாநிதியிடம் வாழ்த்துப் பெற்றார். "வீழ்வது நானாயிருந்தாலும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்' (இம்மாதிரி பொன்மொழிகளின் ஸ்டாக் (Stock) கருணாதியிடம் நிறைய உண்டு) என்ற பொன்மொழியை விஜயகாந்த் நினைவுகூர்ந்ததை தானும் நினைவூட்டி கருணாநிதி வாழ்த்தியுள்ளார்.

மாநாடுக்குத் தேவையான போலீஸ் பாதுகாப்பு அளித்ததுக்கு அவர் ஜெய லலிதாவுக்கு நன்றி தெரிவித்தார். மாநாட்டு மேடையிலே மௌனமாக இருந்து தம் வெறுப்பை சொல்லாமல் சூசகமாக உணர்த்தியவர்கள் பாமாக தலைவர் மருத்துவர் ராமதாஸ், விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் திருமாவளவன். மாநாடு முடிந்த மறு நாளிலிருந்தே பகைமை வெளிப்படத்தொடங்கி விட்டது. விஜயகாந்தின் கட்சி சுவரொட்டிகள் கிழிக்கப்பட்டன. இதற்கு விஜயகாந்தின் பதில் 'எவ்வளவு நாளைக்கு இவர்கள் இப்படிக் கிழித்துக் கொண்டிருக்கமுடியும்.?' - அவ்வளவே. இதுவும் அவரை மற்ற அரசியல் வாதிகளிடமிருந்து தனித்துக் காட்டியது.

விஜயகாந்தின் அரசியல் பிரவேசம் பிரதான கட்சிகளான திமுக வையா அல்லது அதிமுகவையா யாரைக்காயப்படுத்தும், இல்லை இருவரையும் ஆளுக்கு சரிபாதியாகவா என்பது யாருக்கும் தெரியவில்லை. பாதிக்கப்போவது வைகோ வின் மதிமுக வை என்பது சொல்லப் படுகிறது. ஆனால், அவர் மௌனம் சாதிக்கிறார். இது நாள் வரை அவருக்கு அந்த கவலை இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் பயந்து தன் வெறுப்பை கட்சி தொடங்குவதற்கு முன்பிருந்தே உலகுக்கு அறிவித்து விட்டவர்கள் திருமாவளவனும், மருத்துவர் ராமதாசும். அது பற்றிய கவலை இல்லாது இருப்பது விஜயகாந்த்.

சினிமா நடிகராக அவரைத் தனித்துச் சொல்ல ஏதும் இல்லை. மற்ற தமிழ் சினிமா ஹீரோக்கள் போல அவரும் ஒருவர். அவர் எப்படி ஹீரோவாக, அதிலும் 40,000 ரசிகர் மன்றங்களைத் தன்னிடம் கொண்ட ஒரு ஹீரோவாக, 55 வயதிலும், 20-30 வயது குறைந்த இளம் நடிகைகளுடன் ஆடி பாடி காதல் செய்து, 40-50 ரவுடிகளை, குண்டர்களை கைமுஸ்டியினாலே போரிட்டு வென்று... ரகளை தான். எல்லா தமிழ் ஹீரோக்களும் செய்யும் அவ்வளவு கோமாளித்தன ரகளைகளும் அவர் செய்கிறார். ஒரு வித்தியாசம். வீர சாவல்கள் விடும், தர்மத்தைக்காக்கும், அநீதிக்கு எதிராக போராடும் ஹீரோ அவர். மற்ற ஹீரோக்கள் அந்த மாதிரி சமுதாய புரட்சி வம்புக்கெல்லாம் போவதில்லை. அவர்கள் எல்லோரும் நடனக் காட்சி 'சூட்டிங்குக்கு போகும் கனடா, ஸ்விட்ஸர்லாந்து, ஸான்ஃப்ரான்சிஸ்கோ என்றெல்லாம் விஜயகாந்த் போவது கிடையாது. அவர் நடனக் காட்சிகளெல்லாம் உள்ளூரிலேயே நடக்கும். இந்த தைரியம் சூப்பர் ஸ்டார்களுக்குமோ யாருக்குமோ வந்ததில்லை. விஜயகாந்த் தன் படங்களில் போராடும் புரட்சிகளின் காரணமாகவே அவர் புரட்சி நடிகர் என்றும் பெயர் பெற்றுள்ளார். இதையெல்லாம் எதற்குச் சொல்கிறேன் என்றால், அவர் படங்களின் கோமாளித்தனங்கள் எல்லாம் தமிழ் படங்களின் முத்திரையாகிவிட்ட கோமாளித்தனங்கள். அது பற்றி ஏதும் சொல்வற்கில்லை. சினிமா நடிகர் என்ற அளவில், மற்ற எந்த தமிழ் சினிமா நடிகரும் நம் மதிப்புக்கு எப்படி உகந்தவாராக நாம் காண்பதில்லையோ அப்படித்தான் விஜயகாந்தும். ஆனால் இன்றைய அவரது அரசியல் பிரவேசம் அவரிடம் ஒரு மரியாதையைத் தோற்றுவிக்கிறது. இது எவ்வளவு நாள் நீடிக்கும் என்பது தெரியாது.

இதற்கு அப்பால், அதாவது திரையுலகிற்கு அப்பால் காணப்படும் விஜயகாந்த், மிக இயல்பான, தனக்கு உண்மையான, பந்தாக்கள் இல்லாத விஜயகாந்த். மேடையேறினால், பத்து நண்பர்களுடன் பேசும் இயல்பில்தான் பேசுகிறார். கோபங்கள் இல்லை. வெற்று பிரதாபங்கள் இல்லை. அலங்கார பொன்மொழிகள் இல்லை. வீர முழக்கங்கள் இல்லை. அவர் தன் பேச்சினால், கூட்டத்தை தன் வயப்படுத்திவிட முடியும் என்று தோன்றவில்லை. தன் பகட்டான பேச்சுத்திறமை அவர் நம்பியிருப்பதாகத் தெரியவில்லை. அவரைக் கேட்க குழுமும் மக்கள் சமுத்திரமும் அதை எதிர்பார்ப்பதாகத் தெரியவில்லை. மாறாக வெகு எளிமையான, இயல்பான அவர் பேச்சே மக்களிடம் அவருக்கு ஒரு நம்பிக்கையைத் தோற்றுவிப்பதாக இருக்கக் கூடும். அந்த இயல்பு, எளிமை, இதுகாறும் தமிழ் மக்கள் எந்த அரசியல் வாதியிடமும் காணாத ஒரு குணம். இது வரை அவர்கள் கேட்டுவந்த பேச்சுக்களின் பொய்மைக்கும் பகட்டுக்கும் எதிரானதாக இருக்கும் இந்த சாதாரணம் உண்மையா னது என்று அவர்களுக்குத் தோன்றக் கூடும்.

"உங்கள் கொள்கை என்னங்க?" என்று ஒரு பிரசித்தி பெற்ற தொலைகாட்சிப் பேட்டியாளர் கேட்க, 'கொள்கை என்னங்க வேணும்.? லஞ்சம் ஒழிக்கணும், எல்லாருக்கும் வேலை கிடைக்கணும், சாப்பாடு வேணும். இருக்க ஒரு இடம் வேணும்' இதைத் தான் செய்யணும். இதுக்கு மேலே என்னங்க கொள்கை?" என்றாராம் விஜயகாந்த். இவ்வளவு வெகுளியாக இருக்கிறாரே இந்த மனிதன்? உருப்படவா போறார்? என்று பேட்டியாளர் நினைத்திருக்கக் கூடும்.

அவரது இன்னொரு கேள்வி? 'உங்க மனைவிக்கு பெரிய இடம் கொடுத்திருக்கீங்க?' இது திமுக, பாமாக, மற்றும் தேசிய அளவில் காங்கிரஸ், சிவசேனா போன்ற கட்சிகளில் காணப்படும் குடும்ப வாரிசு அரசியலை மனத்தில் கொண்டு கேட்கப்பட்ட கேள்வி. இந்தக் கேள்வியை அந்த பேட்டியாளர் கருணாதியிடம் கேட்க மாட்டார். விஜயகாந்த் கத்துக்குட்டி, புதிய ஆள், கேட்க தைரியம் வந்திருக்கிறது.

### வெங்கட் சாமிநாதன்

'இத்தனை வருடங்களாக எனக்குத் துணையாக இருந்தவரை நான் இப்போது இதிலும் உதவிக்கு அழைத்துக் கொள்வதில் என்ன தவறு இருக்கிறது? அப்படி எனக்கு உதவுகிறவருக்கு கட்சியில் எந்த பதவியும் கிடையாது. இங்கே அவர் மேடையில் இல்லை. அங்கே பார்வையாளர் கூட்டத்தில் அவர் அமர்ந்திருக்கிறார். மேலும் 33 % அவர்களுக்கு இட ஒதுகீடு செய்யவேண்டும் என்று எல்லோரும் சொல்கிறார்கள். செய்வதில்லை. தன் கட்சியினருக்கு எந்தெந்த மந்திரி பதவிகள் வேண்டும், இல்லையெனில் கூட்டணியில் சேரமாட்டோம் என்றவர்கள், பெண்களுக்கான இட ஒதுக்கீடு என்றால், கூட்டம் கூட்டுகிறார்கள், ஊர்வலம் செல்கிறார்கள், கோரிக்கை அனுப்புகிறார்களே, ஏன்?" என்று விஜயகாந்த் அந்த பத்திரிகையாளருக்கு பதில் அளிக்கிறார்.


விஜயகாந்த் மறைமுகமாக குறிப்பிட்டது. கருணாதியின் செயல்முறை பற்றி. கருணாதி தனக்கு வேண்டிய விசயங்களில் நிர்ப்பந்தம் செய்து பெற்றுக்கொள்வார். ஆனால் வேறு விசயங்களில் அவருக்கு அக்கறை இல்லை, ஆனால், ஒப்புக்காவது தானும் போராடுவதாக காட்டிக்கொள்ளவேண்டுமென்றால், கூட்டம் போட்டு, தீர்மானங்கள் எழுதி, பின்னர் அது மறக்கப்பட்டுவிடும். என்னதான் மறைமுகமாகச் சொன்னாலும், தான் தாக்கப்படுவது கருணாதிக்கு புரியாது போகப் போவதில்லை. அதைக் கேட்டு அவர் வாளாவிருக்கப் போவதுமில்லை. "மன்னிப் போம் மறப்போம்' என்பது அவரது ப்ராண்ட் பொன்மொழி. இதற்கு அர்த்தம் அவர் மன்னிக்கப் போவதுமில்லை, மறக்கப் போவதுமில்லை என்பது கருணாதியை அறிந்தவர்களுக்குத் தெரியும். விஜயகாந்த் இத்தளத்திற்குப் புதியவர்.

சினிமாவின் பிரபல்யத்தை, தன் ரசிகர் மன்றக் கூட்டத்தை வைத்து, அரசியலுக்கு வருவது என்பது தமிழ் நாட்டிற்கு புதிதல்ல. அவருக்கு எடுத்த உடனேயே தன் பின்னிருக்கும் கணிசமான தொண்டர் படையைக் காட்டி தன் முக்கியத்துவத்தை மற்றவர்க்கு உணர்த்த முடியும். எல்லோரோடும் நட்புணர்வோடு இதுகாறும் இருந்ததும் ஒரு பலம் தான். எந்த பெரிய அரசியல் கட்சியுடனும், தலைவருடனும் அவருக்கு பகை இல்லை. அவர் இருப்பும், அரசியல் வருகையும் சிலருக்கு பயத்தைத் தந்திருக்கிறது. கட்டாயம் அவர் ஒரு சில கட்சிகளின் வாக்குகளைப் பறிக்கப் போகிறார். அது அவருக்கு பேரம் பேச உதவியாக இருக்கலாம். அரசியல் களத்தில் இறங்கி பிரசாரம் செய்யத் துவங்கி விட்டால், இப்போதுள்ள நட்புகள் சிலவற்றை இழக்க நேரிடலாம். பல கட்சிகளில் அதிருப்தியோடு, மனம் புழுங்கிக் கிடப்பவர்கள் புதிய கட்சிக்கு வரக் கூடும். எம்.ஜி.ஆர். காலத்தில் அதிமுக வில் முக்கிய புள்ளியாகவும், நிர்வாகத்தில் கெட்டிக்காரரென பெயர் வாங்கி பின் எம்.ஜி.ஆரின் மரணத்திற்குப் பின் அரசியலி லிருந்து மறைந்துவிட்ட பண்ருட்டி ராமச்சந்திரன், இப்போது விஜயகாந்துக்கு ஆலோசகராக செயல்படத் தொடங்கியிருக்கிறார். வட மாவட்டங்களில் கட்சியின் விவகாரங்கள் பண்ருட்டி ராமச்சந்திரன் பொறுப்பிலும் தென் மாவட்டங்கள் விஜயகாந்தின் பொறுப்பிலும் பிரித்துக் கொண்டிருப்பதாக சொல் லப்படுகிறது. இதில் குறிப்பிடத்தக்க விசயம், பண்ருட்டி ராமச்சந்திரன் வன்னியர், ஆகவே வன்னியர் பெருவாரியாக இருக்கும் வடமாவட்டங்களின் அவர் பொறுப்பில் விடப்பட்டுள்ளன.


இது மருத்துவர் ராமதாசுக்கும், திருமாவளவனுக்கும் தலைவலி தரும் ஒன்றாக இருக்கும்.

அடுத்து, லஞ்ச ஒழிப்பு தவிர இன்னும் சில விசயங்களில் விஜயகாந்த் மற்ற அரசியல் வாதிகளிலிருந்து வேறுபடுகிறார். தன் தெய்வபக்தியை விஜயகாந்த் மறைப்பதில்லை. மாநாட்டுக்கு வரும் முன் என்னென்ன தெய்வங்களிடம் பிரார்த்தனை செய்து விட்டு தா வந்துள்ளதாக அவர் பேசினார்.

தன்னை ஆஸ்திகன் என்றும் தெய் பக்தி உள்ளவன் என்றும் பொது வாழ்க்கையி உள்ளவர்கள் சொல்லிக் கொள்வது தமிழ் நாட்டி அறவே இல்லாத விசயம். அது போல் ஜாதி என் விசயம். மற்றவர்களுக்கு ஜாதி எவ்வளவு தா முக்கியமாக இருந்தாலும், அவர்கள் அரசியல் வாழ்க்கையே வெளியே சொல்லாத ஜாதிக் கணக்குகளாலேயே கட்டமைக் கப்படிருந்தாலும், பேசுவது



தொடர்ச்சி 22ம் பக்க






# "தமிங்கிலீசுத்தமிழர்கள்"

ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் உலகம் முழுவதும் பரவிய காலம்தொட்டு இன்றுவரை ஆங்கிலமொழி, முதல் மொழியாக உலகமெங்கும் பரவி நிற்கின்றது. உலகப்பொது மொழியாக ஆட்சி செய்கின்றது. இலங்கைத்தீவில் ஒருமித்து வாழ்ந்தும் சிங்கள மொழியை தமிழர்கள் அரசியல் காரணங்களுக்காக வெறுத்தாலும், ஆங்கிலமொழி அந்நியமாக இருந்தும் பல காரணங்களினால் தமிழர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. வாழ்க்கைக்கு தேவையான நீதி முதலாக விஞ்ஞானம் என்று பலதுறைகளிலும் அறிவினை விருத்தி செய்து கொள்ள ஆங்கில மொழியின் தேர்ச்சி ஆரம்பகாலத்தில் இருந்தே எமக்கு தேவைப் பட்டு வந்து இருக்கின்றது. வாழ்க்கையில் முன்னேறத் தேவையான கல்வியில், ஆங்கிலமொழியில் அறிவு முதல் பேசும் திறன்வரை இன்றியமையாத தொன்றாகிவிட்டது. அது தமிழர்களுக்கு மட்டுமல்லாது பல இனமக்களுக்கும் பொதுவானதாக உள்ளது. தமிழர்கள் ஈழமண்ணில் வாழ்ந்த காலங்களில் விரும்பியோ, விரும்பாமலோ பாடசாலைகளில் ஆங்கில மொழியை ஒரு கட்டாயபாடமாக கற்றுவந்திருந்தும் அதில் பலர் தேர்ச்சி பெறாமல் இருந்தும், பல ஈழத்தமிழர்களின் வாழ்க்கையில் உண்டான திடீர் திருப்பங்களினால் வெளிநாடுகளில் குடி பெயர்ந்து வாழத்தலைப்பட்டதனால், முன்னர் படித்த ஆங்கிலமொழி இன்று ஏதோவகையில் கை கொடுக்கத்தான் செய்கின்றது. அதிலும் ஆங்கில மொழியை முதல் மொழியாக கொண்ட கனடா போன்ற நாடுகளில் ஆங்கில மொழியில் உரையாட முடியாதவன் வாய்பேச முடியாதவனுக்கு சமானமாக நடத்தப்படுவான், எதற்கும் மற்றவர்கள் உதவியை தேடவேண்டி இருக்கின்றது. அதனால் மிகவும் பாதிக்கப்படுகிறான்.

## சாதாரண மனிதனின் பார்வையிலிருந்து

உயர்கல்வி கற்று, நல்லதொழில் செய்து நன்றாக வாழத்தலைப்பட்டதில் நீதித்துறையில், வைத்தியத்தில், பொறியியலில், கணக்கியலில் ஆங்கில அறிவும் பேச்சுத்திறனும் பலருக்கு எண்ணிலடங்கா கதவுகளைத் திறக்கவைத்து வெற்றியைக் கொடுத்தது. வாழ்க்கையில் வெற்றி பெற ஆங்கிலம் வழிவகுப்பதைக் கண்ட பல தமிழர்கள் ஆங்கிலத்தில் பேசினால் மற்றவர்களை விட தமக்கு ஏதோ பெரிய கௌரவம் கிடைத்து விடுவதாகவும், சமுதாயத்தில் மற்றவர்களைவிட தாம் ஏதோ வகையில் பெரிய அந்தஸ்தை பெற்றுவிட்டதாகவும் கருதத் தொடங்கினர். ஆங்கிலத்தில் பேசுவது தான் நாகரிகம் என்றும், எதற்கும் மற்றவர்களுடன் போட்டி போட்டு மற்றவர்கள் செய்வதையே தாமும் செய்யும் சுயமாக சிந்திக்க முடியாத தமிழர்கள் கல்வியை, ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்ளாமலும் அந்த மொழியை சரிவர கற்றுக்கொள்ளாமலும் ஏதோ தெரிந்த ஒரு சில ஆங்கிலச் சொற்களையும், வார்த்தைகளையும் வைத்துக்கொண்டு தமது தாய்மொழியின் பாணியில் ஆங்கிலத்தை பேச தலைப்படுகின்றனர். அதுவே தமில்கிலீசு ஆகிறது. இவர்கள் செய்வன திருந்தச்செய் என்பதை எல்லாம் பொருட்படுத்த மாட்டார்கள். வெட்கம், மானம் என்பது பற்றி எல்லாம் அக்கறைப்படமாட்டார்கள். அப்படிப்பட்டவர் களில் பலர் பாவபுண்ணியம் பார்ப்பதில்லை. சுயநலமாக எதையும் செய்யத்துணிவார்கள். அதிலும் பண ஆசை பிடித்த பலர் படுபாதகமான காரியங்கள் செய்வதற்கு கூட தயங்குவதில்லை. அப்படிப்பட்ட தமிழர்கள் பலர் தமிழர்களுக்கு சேவை என்ற பெயரில் தொழில்புரிகின்றார்கள். அதிலும் வழக்கறிஞர்கள், வைத்தியர்கள் என்று கல்வித்துறையில் அறிவு பெற்றவர்கள் முதலாக வீடு விற்பனை, வீட்டு அடமானக்கடன் பெறுதல், காப்புறுதி பெறுதல் என்பதில் இருந்து சாதாரண Traffic Ticket பெறுபவர்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுப்பது என்பதுவரை பல தொழில்களிலும் ஊரைக்கொள்ளையடிப்பவர்கள் போன்று தொழில் செய்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களை என்ன வகையில் திருத்தலாம்.

கள்வர்களும், காடைத்தனம் புரிபவர்களும் மனிதரிடையே இருப்பது அதிசயமல்ல. இயலாமையாலேயே பெரும்பாலானவர்கள் அந்த வழியில் நடக்கின்றார்கள் என்பது தான் உண்மை. ஆனால் படித்திருந்தும், அறிவிருந்தும் படித்து தொழில் புரிபவர்கள் பலர் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள். உதாரணமாக ஒருவர் வீடு விற்பனை முகவராக வரவேண்டுமாயின் Ontario Real Estate Association என்ற அமைப்புடன் தொடர்பு கொண்டு கனடாவில் வசிப்பவராக இருக்கும் இடத்தே வேண்டிய பணத்தை செலுத்தி தகுதியாவதற்கு வேண்டிய அறிவுக் கல்வியைக் கற்று சித்தி பெற்றால் ஒரு வீடு விற்பனை முகவராக வரலாம். ஆங்கிலத்தில் தான் கற்க வேண்டும் என்றிருந்தும், பல இனமக்களுக்கு சேவை வேண்டி இருப்பதால் ஆங்கில மொழியில் அதீத அறிவு இருக்க வேண்டும், பேச்சு வல்லமை தேவை என்பதெல்லாம் முக்கியமல்ல. இலங்கையில் சில அலுவலகங்க ளில் தொழில்புரிவதற்கு தேவைப்படும் ஆங்கில அறிவும், ஆளுமையுமே இங்கு வீடு விற்பனை முகவராவதற்கு தேவையில்லை. தமிழர்கள் முதலாக, இங்கு இருக்கும் பல இன வீடு விற்பனை முகவர்களுடன் ஆங்கிலத்தில் உரையாடிப்பார்த்தால் அந்த உண்மை புரியும். தமிழிலோ அல்லது தமது தாய் மொழியிலோ தான் படித்து வீடு விற்பனை முகவராக வந்திருப்பார்களோ என சந்தேகம் உண்டாகும். அந்த அளவிற்கு தமிங்கிலீசு தமிழர்கள் போன்ற பலர் வீடுவிற்பனை முகவர்களாக இருப்பதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. அப்படி வருவதில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால் அப்படி வந்த பின்பு தான் பிரச்சினையே அதிகமாகின்றது. எப்படியாவது பணம் பண்ணிவிடவேண்டும் என்பதற்காக அதே தமிங்கிலீசுத் தமிழர்கள் வீட்டுக்கடன் எடுத்து கொடுப்பது முதல் வழக்கறிஞர்கள் வரை கூட்டுச் சேர்ந்து தட்டிச்சுற்றி ஏமாற்றி தமிழர்களிற்கு தண்ணி காட்டுவதையே தொழிலாக செய்கின்றனர். எச்சில் கைகளால் காகத்தை விரட்ட விரும்பாத கஞ்சத்தனம் கொண்ட தமிழர்களும் இவர்கள் காட்டுகின்ற ஆசை வார்த்தைகளை உண்மை என்று எண்ணி பணத்தாசையினால் இனிக்கும் சொற்களால் கவரப்பட்டு ஏமாந்த பின்பு குய்யோ முறையோ என்று அத்தனை தமிழ் வீடுவிற்பனை முகவர்களும், வீட்டுக்கடன் முகவர்களும், வழக்கறிஞர்களும்... ஏமாற்றுக்காரர்கள் என்றே சாயம் பூசுகிறார்கள். பூரணமாக ஆங்கில அறிவை வளர்த்துக்கொண்டு அனைத்து சமூகத்தினரிடமும் சேவை செய்து தமது வாழ்க்கையை வெற்றி பெறவைக்க முடியாத வீட்டுவிற்பனை முகவர்களும், வீட்டுக்கடன் எடுத்துக் கொடுப்பவர்களும், வழக்கறிஞர்களும் ஆங்கிலத்தை முறையாக கற்றுக்கொள்ள வேண்டும். அப்படி ஆங்கிலத்தின் ஆளுமை வருமிடத்தேதான் வெற்றிகரமாக தொழில் புரியலாம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

இவர்களை எவ்வாறு இனம் காணுவது? எடுத்ததுக்கெல்லாம் ஆங்கிலத்தில் உரையாட தலைப்படுவார்கள். தமிழில் உரையாடினாலும் ஏதோ தமிழ் புதிதாக பேசக்கற்று கொண்டவர்கள் போல ஆங்கிலத்தொனியில் தமிழ் பேசுவார்கள். சகதொழில் புரிபவர்களை பற்றி இகழ்வாக பேசுவதுடன், தம்மைப்பற்றியே தம்பட்டம் அடிப்பதிலும், தாம் செய்யும் தொழிலில் பல விருதுகள் பெற்றதாகவும், கனடாவில் முதல்தரம் வாய்ந்தவர்கள் தாம்தான் என்றும் பாராட்டப்பட்டதாக சுயபுராணம் பாடுவதிலே நேரத்தை செலவழிப்பார்கள். தாம் விளம்பரம் செய்யும் பத்திரிகையாளர்களைக் கொண்டு படங்கள் பிடிப்பித்து, வால்பிடிக்கும் அரசியல்வாதிகளுக்கு மாலை அணிவித்தலும், விழாக்களில் கலந்துகொண்டதாகவும் விளம்பரம் தேடி தமிழ்பிரமுகர்களாக காட்டிக் கொள்வார்கள். வழக்கறிஞர்களாக இருந்தால் ஏதோ புத்திமதி சொல்வது போன்று தமது இயலாமையை மறைக்க, வீணாக வழக்குவம்பு என்று போய் வீண்செலவு செய்யவேண்டாம் என்று அறிவுரை கூறுவார்கள். அதற்குக் காரணமே வழக்காடு மன்றத்தில் தமது திறமையை காட்ட இயலாமையே ஆகும். இப்படிப்பட்டவர்களிடமிருந்து தூரவிலகுவதே நன்மை தரும்.

"திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டினை ஒழிக்க முடியாது" என்று பட்டுக்கோட்டை பாடிய பாடல் இவர்களுக்கு உணர்த்துவது என்னவெனில் செய்கின்ற தொழிலை சரிவரச் செய்யாமல் மற்றவர்களின் பணத்தை பெறுவது திருடுவதற்கு சமனாகும்.

பரம்ஜி

ஒரு சாதாரண மனிதன்


**DELTA MIXER GRINDER**

ஒவ்வொரு சமையலறைக்கும் அத்தியாவசியமானது

**100% உலகத் தரம் வாய்ந்தது**

தீபாவளியை முன்னிட்டு விசேட விலைக் கழிவு




- 110 V, 550 W Power
- 3 Pcs Stainless Steel Jar
- 1 Year Warranty
- 4 Interchangeable Blades

**(416) 294 - 5024**

Wholesaler / Distributorship Enquires Welcome





**உங்கள் பிள்ளைச் செல்வங்களுக்கு எமது தாய் மண்ணுடன் ஒரு தொடர்பினை ஏற்படுத்த அல்லது உங்கள் ஓய்வு காலத்தை அங்கு இன்பமாகக் களித்திட இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் வீடு நிலங்களில் முதலிட எண்ணுகிறீர்களா?**

**நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்**

பரம்ஜி - **416.230.1107**

**PARAM. G GNANASWARAN**
Sales Representative

HOMELIFE HIGHER STANDARDS

**HOME LIFE GTA REALTY INC.**
1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON

**416.321.6969**
**905.670.9969**
(Mississauga)
paramg@themathuram.com

# விளையாட்டுச் செய்திகள்

## கிரிகெட் - 2005 சிறந்த வீரர்கள்




இங்கிலாந்தின் ஆன்ரு ஃபிளின்டாப் மற்றும் தென்ஆபிரிக்காவைச் சேர்ந்த ஜாக்குஸ் காலிஸ் ஆகிய இருவரும் இணைந்து இந்த ஆண்டின் சிறந்த வீரருக்கான சர்வதேச கிரிக்கெட் வாரிய விருதினைப் பெற்றனர். சிட்னியின் இதற்கான தேர்வு நடைபெற்றது. 50 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.சி.சி தேர்வுக்குழு நடத்திய தேர்தலுக்குப் பிறகு இந்த முடிவு அறிவிக்கப்பட்டது. இருவீரர்களும் இணைந்து 84 வாக்குகளைப் பெற்றிருந்தனர். ஐ.சி.சி வரலாற்றில் இருவீரர்களும் இணைந்து விருது பெறுவது இதுவே முதல் முறையாகும். இருவருக்கும் சர் கேரிஃபீல்டு சோபர்ஸ் கோப்பை வழங்கப்பட்டது. சிறந்த ரெஸ்ற் வீரராக ஜாக்குஸ் காலிஸ் தேர்ந்தெடுக்கப் பட்டார். சிறந்த ஒரு நாள் ஆட்டக்காரருக்கான விருது இங்கிலாந்தின் கெவின் பீட்டர்சனுக்கு கிடைத்துள்ளது. தென்னாபிரிக்காவில் பிறந்து இங்கிலாந்துக்கு விளையாடும் கெவின் பீட்டர்சன் இந்த ஆண்டில் தான் விளையாடிய 21 ஒருதின ஆட்டங்களில் மூன்று சதங்களையும், நாலு அரைச் சதங்களையும் குவித்துள்ளார். ரெஸ்ற் தொடரில் கடந்த ஆஷஸ் கோப்பையில் மட்டுமே இவர் விளையாடியுள்ளார். அதிலும் இரண்டு அரைச் சதங்களைக் குவித்துள்ளார். சிறந்த அறிமுக வீரருக்காக பரிந்துரைக்கப்பட்ட இந்தியாவின் தினேஷ் கார்த்திக் தேர்வு பெறவில்லை. சிறந்த நடுவராக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த சிமன் டாஃபெல் தேர்வு செய்ய்பட்டார்.

## சிங்கம், புலி என எல்லாரையும் மடக்கியது கங்காரு!

அவுஸ்திரேலிய அணி மூன்றாவது ஒருநாள் போட்டியில் 156 ஓட்டங்கள் வித்தியாசத்தில் உலக லெவன் அணியை வீழ்த்தியது. முதலாவது சூப்பர் தொடர் போட்டியை 3 - 0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி தான் ஒரு சாம்பியன் அணி என்பதை மீண்டும் நிலை நாட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. அவுஸ்திரேலிய லெவன் அணிக்கும் ஐ.சி.சியின் உலகலெவன் அணிக்குமிடையே மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் நடத்த திட்டமிடப்பட்டது. இதன் மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நேற்று மெல்போர்ன் நகரில் உள்ள டெஸ்ட்ரா டோம் உள்ளரங்க மைதானத்தில் நடந்தது. முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் ஐந்து விக்கெட்டுகளை இழந்து 293 ஓட்டங்களை எடுத்தது. அவுஸ்திரேலிய அணி சார்பில் மிடில் ஆர்டர் பேட்ஸ்மேனான ஹஸ்ஸே 75 ஓட்டங்களையும், வாட்சன் 66 ஓட்டங்களையும் எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தனர். அணித்தலைவர் ரிக்கிபாண்டிங் 68 ஓட்டங்கள் எடுத்தார். துவக்க வீரர் கில்கிறிஸ்ட் 32 ஓட்டங்களையும், மார்டின் 33 ஓட்டங்களையும் எடுத்து அணியின் ஸ்கோர் அதிகரிக்க உதவினர். ஹஸ்ஸே மற்றும் வாட்சன் இருவரும் இணைந்து ஆறாவது விக்கெட்டிற்கு 145 ஓட்டங்கள் சேர்த்தனர். பாண்டிங்கும், மார்டினும் இணைந்து மூன்றாவது விக்கெட்டிற்கு 85 ஓட்டங்கள் சேர்த்தனர். முதலில் நடந்த இரண்டு போட்டிகளில் சரியாக விக்கெட் எடுக்காத அக்தர் இந்தப் போட்டியில் இடம்பெறவில்லை. அவருக்குப் பதிலாக தெ.ஆ. வீரர் மகாயா நிடினி அணியில் இடம்பெற்றார். முதல் இரண்டு போட்டிகளைப் போலவே மூன்றாவது போட்டியிலும், உலக லெவன் அணியின் வேகப்பந்து வீச்சு எடுபடவில்லை. முரளீதரன் 38 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டை எடுத்தார். வெட்டோரி, போலாக் மற்றும் நிடினி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை எடுத்தனர். 294 ஓட்டங்கள் எடுத்தால் வெற்ற என்ற இலக்குடன் களமிறங்கிய உலக லெவன் அணி, 27.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. உலக லெவன் அணி தரப்பில் சேவாக் அதிகபட்சமாக 37 ஓட்டங்களை எடுத்தார். அடுத்த இடத்தில் இருப்பது உதிரிகள் தான் 24. பிளின்டாப் 21 ஓட்டத்தில் ஆட்டமிழந்தார். துவக்கவீரர் கிறிஸ் கெய்ஸ், லாரா மற்றும் வெட்டோரி ஆகியோர் பூஜ்யத்திலேயே ஆட்டமிழந்தனர்.

**எஸ். கணேஷ்**

சங்கக்கரா 13 ஓட்டங்களிலும், அப்ரிடி டிராவிட் 16 ஓட்டங்களிலும், காலிஸ் இரண்டு ஓட்டங்களிலும், ஆட்டமிழந்தனர். அவுஸ்திரேலிய அணி தரப்பில் பிரெட்லீ 30 ஓட்டங்களைக் கொடுத்து நாலு விக்கெட்டை சாய்த்தார். வாட்சன் 39 ஓட்டங்களைக் கொடுத்து நாலு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். மெக்ராத் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். முதல் இரண்டு போட்டிகளில் தோற்றதால், உலக லெவன் அணி மூன்றாவது போட்டியில் வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்த மூன்றாவது போட்டியில் முதல் இரண்டு போட்டிகளை விட மோசமாக ஆடி தோற்றது. ரெஸ்ற் போட்டியில், உலகில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்களில் முதலிடத்தில் உள்ள மேற்கிந்திய தீவின் நட்சத்திர வீரரான பிரையன் லாரா இந்தப் போட்டியில் டக் அவுட் ஆனதன் மூலம் இந்தத் தொடரிலும் இரண்டாவது முறையாக டக் அவுட் ஆனார். அடுத்ததாக இரு அணிகளுக்கு இடையே சிட்னி மைதானத்தில் 14-ஆம் திகதி ஆறு நாள் கொண்ட சூப்பர் ரெஸ்ற் நடந்து கொண்டிருக்கின்றது. ஒருநாள் தொடரைக் கோட்டைவிட்ட உலக லெவன் அணி அதிலாவது வெற்றி பெறுமா என்று ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர். மூன்றாவது போ... ஆட்டநாயகனாக வாட்சனும், கி... தொடர் நாயகனாகவும் தேர்வு செய்யப்...

## சொக்க வைக்கும் சோனியா...

